1972 மார்ச் 9]

அங்குள்ளவர்கள் கீழே வர வேண்டியிருக்கிறது ஆகவே மலை வாசப் பகுதிகளில் ஒரு இடத்திலே நிரந்தரமாக அது தங்கு வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நடமாடும் மருத்துவ மனை என்பதே நடமாடிக் கொண்டிருப்பதுவே யல்லாது அங்கேயே நின்றுவிடுவதாக இருந்தால் அதற்கு நடமாடும் மருத்துவமனை தேவை இல்லை. ஆனால் அந்த டாக்டர்கள் அங்குள்ள நிலைமைக் கேற்ப தொடர்பு வைத்துக் கொண்டு பணியாற்றுவார்கள்.

கால்நடை வளர்மானம்

* 380 **வினு—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினு வுக்கு விடையளிப்பாரா :—

கால்நடை வளர்ப்புக்காக மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த மானியம் நிறுத்தப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு' கே. என். குமாரசாமி : இந்தக் கால்நடை வளர்ப்புக்காக நல்ல தரமுள்ள கன்றுகளை அழிக்காமலும் விற்றுவிடாமலும் இருப் பதற்காக அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து முன்பு மானியம் ஒரு கன்றுக்கு மாதம் ரூ. 30 என்று வழங்கப்பட்டு வந்தது. அதனால் நல்ல தரமான கன்றுகாலிகளை ஏழை எளியவர்கள் காப் பாற்றி வந்தார்கள். இப்போது அந்த மானிய உதவி நிறுத்தப் பட்டுவிட்டதால் கன்றுகாலிகளை வளர்க்க முடியாமல் இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை அரசாங்கம் மீண்டும் மத்திய அரசிடம் பேசிக் கொண்டுவர முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வினு கால்நடை வளர்ப்புக்காக என்று இருக்கிறது. அதற்கு ஆங்கிலத்தில் அனிமல் ஹஸ்பன்டரி என்றுதான் பொருள். அதில் பல பகுதிகள் உள்ளன.

(1) Progeny Testing of Bulls.

(2) Rinder Pest Eradication.

(3) Training Centre for Sheep Husbandry and Rural Technology.

(4) Sheep Breeding Farms.

இப்படி பல தலைப்புகள் உள்ளன. அவைகளில் மத்திய அரசு ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ள முறைப்படியான உதவிகளை நிறுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. கன்றுகளின் வளர்ச்சிக்காக என்று கேட்கப்பட்டிருந்தால் முழு விவரங்கள் தந்திருக்க முடியும். அவைகளுக்கு மத்திய அரசின் உதவியும் இல்லை. மாநில அரசு இந்த சப்ஸிடி முறையில் எல்லா வளர்ச்சிகளையும் ஏற்படுத்துவது என்பது பலநேரங்களில் அதன் முக்கியமான நோக்கம் இழந்துவிடச் செய்கிறது என்ற அச்சத்தோடு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : இந்தக் கால்நடை வளர்ப்புக்காக மத்திய அரசு உதவி தருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மானிய உதவி கொடுக்க முடியவில்லை என்றாலும், தரமுள்ள மாடுகள் வாங்குவது என்றால் 1,000, 1,500 ரூபாய் ஆகிறது. ஆகவே கடன் உதவியாவது அளித்து அந்த மாடுகளை அபிவிருத்தி செய்ய அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக ஸ்மால் ஃபார்மர்ஸ் ஸ்கீம் என்ற முறையில் பல கிராமங்களில் உள்ளவர்களுக்கு இப்படி கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டால் கடன் வசதி செய்ய சில முறைகள் உள்ளன. வேண்டிய முயற்சிகளை உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொள்வார்களேயானால் வங்கிகளில் இருந்தும் கடன் தர சிலயிடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ்நாட்டில் கால்நடைகளின் தரத்தையும் தன்மையையும் உயர்த்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து சில கால்நடைகளை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசை நம் அரசு வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. மத்திய அரசும் இணங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : முன்னால் இயங்கிக் கொண்டிருந்த ஐ.ஸி.டி.பி. திட்டம் எல்லாயிடங்களிலும் அமல்படுத்தி கால்நடை வளர்ப்பை மேம்படுத்த உரிய வழி செய்யப்படுமா ?

1972 மார்ச் 9]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஐ.வி.டி. பிராஜெக்ட் என்ற முறையில் அமைக்கப்பட்ட திட்டம் இடையில் கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அதே நோக்கம் மையக் கிராம வளர்ச்சித் திட்டம் மூலம் ஆங்காங்கு ஆர்டிஃபிஷியல் இன்செமனேஷன் சென்டேர்ஸ் மிகுதியாக ஏற்படுத்துவதன் மூலம் அந்தத் திட்டத்தின் நோக்கத்தில் பெரும் பகுதியை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கன்றுகாலிகளைப் பராமரிப்பதில் பல கஷ்டங்கள் உள்ளன. ரின்ட்ர்பெஸ்ட் நோய் அடிக்கடி ஏற்படுகிறது. அதற்கான எக்ஸ்பர்ட்ஸ் இரண்டு மூன்று பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே இதை விரிவு படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ? கூடுதலாகப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்த ரின்டர்பெஸ்ட் நோய் கால்நடைகளுக்கு வருவது வெளிமாநிலங்களிலிருந்து வருகிற கால்நடைகள்தான் காரணமாக இருக்கும் என்று கருதப் பட்டு அவைகள் வருகிறபோது இங்கு அவை இம்யூன் செய்யப் பட்ட பிறகுதான் உள்ளே அனுமதிக்கப்பட வேண்டும் என்கிற முறையில் ‘ Check-post under Rinder Pest Eradication Programme ’ ஏற்படுத்துவதில் அரசு முனைந்திருக்கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : கால்நடை வளர்ப்புத் திட்டத்தில் சமீபத்தில் கூட மத்திய அரசின் உதவியின் மூலம் ‘ டைரி டெவலெப்மென்ட்’டுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பால் பெருக்குத் திட்டத் தின் அடிப்படையில் அமையும் ஒன்றுதான் அது. கால்நடை வளர்ச்சியிலும் அதிகம் கவனிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : பாமலி ப்ளானிங்-க்கு அதிகப் படியான விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. அதேபோல் கால்நடைத் துறையிலும் விவசாயிகளுக்குப் பயன்படும் முறையில் கடன் வசதி, சப்ஸிடி வசதி போன்றவை குறித்து தக்கபடி விளம்பரங்கள் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

[1972 மார்ச் 9

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது சப்ஸிடி முறை என்பதல்ல. இது கடன் உதவி மட்டும்தான். லோன் ஸ்கீம். ஆங்காங்குள்ள நிலைமைக்கேற்ப பத்து அல்லது இருபது பேர்கள் சேர்ந்து முயற்சித்தால் கொடுப்பது என்பதாகும். குடும்பக் கட்டுப்பாட்டிற்கு விளம்பரம் செய்வது என்பது மனிதனின் மனம் அடிக்கடி குழம்பிவிடுகிறது. அப்படி இவற்றிக்கு விளம்பரம் தேவையில்லை. தெளிவு இருக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் எங்கள் மாவட்டத்தில் ஒரு சில ஏரியாக்கள் எடுக்கப்பட்டு கால்நடை வளர்ப்பிற்கு மத்திய அரசாங்கம் நான்கில் ஒரு பங்கு கடன்கள் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். பல மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மாவட்ட கூட்டுறவு வங்கிக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து இதற்காகக் கடன் வழங்கப்படவில்லை. ஆகவே அங்குள்ளவர்கள் கடன் வாங்கமுடியாமல் இந்த வருஷம் பூராவும் போய்விட்டது. ஆகவே கால்நடை வளர்ப்பிற்காக மானிய உதவி பெறுவதற்கு, கடன் வழங்க சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் குறிக்கோளில் ஒன்று கிராமங்களில் இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று கடன் உதவி அளிப்பது என்பது. அதில் மானியம் இருக்கிறதா என்று தெரியாது. மானியங்களாக வங்கிகள் தர முடியாது. அத் திட்டத்தில் எந்த விதமான குறைபாடுகள் இருந்தாலும் அதுபற்றி எழுதியனுப்பினால் அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

* 381 **வினா—திரு. எம். ஏ. லத்தீப்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆலங்காயம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் 'ஜெர்சி' போன்ற உயர்ரக கால்நடை அபிவிருத்திப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.